# தேவனுடைய உண்மையான மிகச்சிறந்த சித்தம்

## 3.3 நிறைவான விசுவாசம்




**வேத வசனம்:** **விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது.**
*எபி. 11:30*

**அறிக்கை:** **நான் காண்பதைக் காட்டிலும் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கிறேன்.**

**சத்தியம்:** கர்த்தர் பெரியவரும் வல்லமையில் மகத்துவமுமானவர். அவருடைய ஞானம் அளவிட முடியாதது. அவரைச் சார்ந்து கொள்கிறவர்கள் சீயோன் பர்வதத்தைப் போல இருக்கி ரார்கள். அவர்கள் அசைக்கப்படுவதில்லை.



**விசுவாசம் - வரையறை:** *நாம் தேவனைக் காணாதிருந்தும் அவர் உண்டு என்று விசுவாசிக்கிறோம். அவரைத் தேடுகிறவர்களை அவர் கனப்படுத்துகிறார். அவர் பெரியவரும், வல்லமை மிக்கவரு மாயிருக்கிறார். அவருடைய ஞானத்திற்கு எல்லை இல்லை. ஆகையால் நாம் அவரை சார்ந்திருக்கலாம். (எபி. 11:6., சங். 147:5)*

### வேதப் பகுதி: யோசுவா 6:1-20

**அறிமுகம்** இஸ்ரவேலரிடம் இயற்கைக்கு மாறான அளவு தேவன் மேல் விசுவாசம் இருந்ததால் அவர்கள் எரிகோவைப் பிடிக்க முயற்சித்தபோது தேவனுடைய உதவியால் வெற்றி பெற்றார்கள். இது ஓர் உண்மை சம்பவம்.

1. இஸ்ரவேலர்கள் சந்தித்த பிரச்சனைகள் (எரிகோவின் கதவுகள் மிக உறுதியாக அடைக்கப்பட்டிருந்தது. ஒருவராலும் அதற்குள்ளே நுழைய இயலவில்லை)

2. அவர்கள் ஏழு நாட்கள் என்ன செய்தார்கள்? (தினமும் ஒரு முறையாக ஆறு நாட்களும் ஏழாம் நாள் ஏழு முறையும் அதனைச் சுற்றிவந்தார்கள்)

3. எரிகோவுக்குள்ளே இருந்த மக்களின் செயல்கள். (அவர்கள் ஒருவேளை இஸ்ரவேலர்கள் ஒருபோதும் வெற்றிபெற மாட்டார்கள் என்று சிந்தித்திருக்கலாம்)

4. எரிகோ மதில் விழுவதற்குக் காரணம் என்ன? (ஆசாரியர்கள் தங்கள் எக்காளங்களை ஊத இஸ்ரவேலர்கள் சத்தமாக ஆர்ப்பரித்தார்கள்)

5. இஸ்ரவேலர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் என்ன?

6. யோசுவா தன்னுடைய யோசனையை நம்பியிருந்தாரா? அல்லது தேவனுடைய வழிகளை எதிர்பார்த்திருந்தாரா? (தேவனுடைய திட்டங்களை)

7. நீங்கள் தேவனுடைய வாக்குறுதியை நம்பியிருப்பீர்களா? அல்லது உங்கள் கண்களால் காண்கிறவைகளை நம்புவீர்களா?

**முடிவுரை:** எபிரெயர் 11:7 ன்படி நாம் நம்முடைய கண்களால் காணாதவற்றிற்காகவும் தேவனைச் சார்ந்திருந்து அவரை விசுவாசித்து, இப்படியாக நம்முடைய விசுவாசத்தைப் பயிற்சி செய்யலாம். நம்முடைய காண்களால் காண்கிறவைகளை மட்டும் அல்ல, தேவனுடைய வார்த்தைகளையும் அவருடைய வாக்குறுதிகளையும் நம்பி வாழலாம்.

**ஜெபம் / அழைப்பு:** **இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.**